

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.6.2023) ஒரகடத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை - டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்து, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தமிழ் வழி பாடப்புத்தகங்களை வழங்கினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கொ. வீர ராகவ ராவ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், டாடா குழும தலைவர் என். சந்திரசேகரன், தலைமை செயல் அலுவலர் வாரன் ஹாரிஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சியுடன் விடியல் மாண்டிசோரி கல்வி அறக்கட்டளையின் சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ள மாண்டிசோரி முறை வகுப்பறைகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திரு.வி.க. நகர் மண்டலம், கோபாலபுரம், சென்னை நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேற்று (08.06.2023) தொடங்கி வைத்து வகுப்பறையினைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே. மோகன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, விடியல் மாண்டிசோரி அறக்கட்டளை செயலாளர் திருமதி ஸ்ருதி கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### உடலுறுப்பு தானம் செய்வோம்! மண்ணும் நெருப்பும் தின்னும்

# உடலைத் தேவையுள்ளோர்க்குத் தந்து மனிதம் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 9 –

மண்ணும் நெருப்பும் தின்னும் உடலைத் தேவையுள்ளோர்க்குத் தந்து மனிதம் காப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டையொட்டி, சேலம் மத்திய மாவட்ட தி.மு.க நிர்வாகி முரளி, தனது மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் உடல் உறுப்பு தானம் செய்ததையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:–



**எங்கும் நிறைந்துவிட்ட தலைவர் கலைஞரின் திட்டங்களால் இப்போதும் பல கோடிப் பேர் பயனடைந்து வருகின்றனர். இந்தியாவுக்கே முன்னோடித் திட்டமாக அவர் அறிமுகப்படுத்திய கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தால் எண்ணற்ற ஏழை எளியோர் உயர் சிகிச்சை பெற்று உயிர் பிழைத்துள்ளனர்.**


**அத்தகைய தாயுமான தலைவரது நூற்றாண்டில் தனது குடும்பத்துடன் உடலுறுப்புத் தானம் செய்ய முடிவெடுத்த சேலத்தைச் சேர்ந்த இந்தக் கழக உடன்பிறப்பின் செயலால் நெகிழ்கிறேன்.**

**கடந்த 2009ஆம் ஆண்டே எனது துணைவியாரும் நானும் உடலுறுப்புகளைத் தானம் செய்ய விருப்பம் தெரிவித்துக் கையொப்பமிட்டு, அனைவரும் உடலுறுப்புத் தானம் செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்ததை இந்த நேரத்தில் நினைவுகூர்கிறேன்.**

**அனைவரும் உடலுறுப்புத் தானம் செய்வோம்! மண்ணும் நெருப்பும் தின்னும் உடலைத் தேவையுள்ளோர்க்குத் தந்து மனிதம் காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# லெனினும் சாவர்க்கரும்!



லெனின்



சாவர்க்கர்

அண்மையில் சாவர்க்கரின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற கூட்டம் ஒன்றில், தமிழ்நாடு பாஜகவின் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் இராம. சீனிவாசன், அதிர்ச்சி தரத்தக்க வரலாற்று திரிபுகள் சிலவற்றைத்தந்துள்ளார். எதிர்க் கொள்கையுடைய இயக்கத்தில் இருப்பவர் என்றாலும், அவருடைய உரைகளையும் சில நேரங்களில் நான் மதித்துக் கேட்டிருக்கிறேன். அந்த மதிப்பையும் நம்பிக்கையையும் முற்றிலுமாகக் குலைத்துவிடும் வகையில், அந்தக் கூட்டத்தில் அவர் பேசியுள்ளார்! எனவே அது குறித்துச் சில செய்திகளை உடனடியாகப் பதிவிட வேண்டும் என்று கருதினேன்.

அந்த உரையில், அவர் லெனின், பெரியார், பாரதியார் ஆகியோர் குறித்துச் சில செய்திகளை வெளியிட்டுள்ளார். மூன்று செய்திகளுமே வரலாற்றுப் பிழையானவை. அவை ஒரு புறம் இருக்க, லெனின் குறித்து அவர் பேசியுள்ள செய்தி மிகப்பெரிய வராற்று திரிபாக உள்ளது! அவர் உரையின் சாரம் இதுதான் “ரஷ்யாவில் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், லெனின் தலைமறைவாக லண்டனில் இருந்தபோது, அப்போது அங்கு இருந்த சாவர்க்கர், தான் தங்கி இருந்த இந்தியா ஹவுஸ் என்னும் இடத்தில் லெனினைத் தங்க வைத்துச் சில மாதங்கள் அவரைக் காப்பாற்றினார். லெனின் கொள்கைகளில் தனக்கு உடன்பாடு இல்லை என்றாலும், அவரைக் காப்பாற்றியவர் சாவர்க்கர் தான். எனவே இன்று கம்யூனிஸ்டுகள் கொண்டாடும் லெனின் தலை மறைவுக் காலத்தில் அவரைக் காப்பாற்றிக் கொடுத்த வர் சாவர்க்கர். இருவரும் பிறகு நெருங்கிய நண்பர்களாகவும் இருந்தனர்”.

இந்த உரைக்கு எந்தச் சான்றையும் சீனிவாசன் தன் பேச்சில் எடுத்துக்காட்ட வில்லை. அவர்கள் எந்த ஆண்டு சந்தித்த னர் என்பது போன்ற தகவலும் இல்லை. இதற்கான முதல் ஆதாரம் (first hand information) எங்கே இருக்கிறது என்பதை யும் அவர் கூறவில்லை.

போகிற போக்கில், பேசிவிட்டுப் போனதோடு சரி! அரசியல் மேடைகள் என்றால், ஒருவரை ஒருவர் வசைபாடிக் கொள்வது தான் என் னும் மனநிலை மக்களிடம் உருவாகி வருவதை நாம் பார்க்கிறோம். அப்படியில்லை. அறி வார்ந்த விவாதங்களைக் கொண்டவையா கவே அரசியல் மேடைகளும், எழுத்துகளும் இருக்க வேண்டும் என்ற நோக்கில், இங்கே சில சான்றுகளை நான் தர விரும்புகிறேன்! சாவர்க்கர் லண்டனில் இருந்தது, 1906 ஆம் ஆண்டு முதல் 1909 ஆம் ஆண்டு வரை யில்! பிறகு சோவியத் புரட்சி நடக்கும்போது சாவர்க்கர் அந்தமான் சிறையில்இருந்தார். எனவே சாவர்க்கரும், லெனினும் லண்டனில் சந்தித்து இருந்தால், அது இந்தக் காலகட்டத் திற்குள் தான் இருந்தாக வேண்டும்! சாவர்க்கர் லண்டனில் இந்தியா ஹவுஸில் தங்கி இருந்தார் என்பதும், மேற் கண்ட 3 ஆண்டுகளில் இரண்டு முறை லெனின் லண்டனுக்குச் சென்றுள்ளார் என்பதும் உண்மை. ஆனால் அந்த இரண்டு முறையும் லெனின் எதற்காகச் சென்றார், எங்கே தங்கி இருந்தார் என்பன போன்ற குறிப்புகள் லெனின் வரலாற்றில் மிகத் தெளிவாக இடம்பெற்றிருக்கின்றன.

எனவே எந்த ஒரு இடத்திலும் லண்டனில் சாவர்க்கரை லெனின் சந்தித்ததாக எந்தக் குறிப்பும் கிடைக்கவில்லை! லெனினோ, சோவியத் வெளியிட்டுள்ள அவருடைய வாழ்க்கை வரலாற்று நூல்களோ இதனை எங்கும் குறிப்பிடவில்லை என்பது மட்டுமின்றி, சாவர்க்கரும் சித்திரகுப்தன் என்னும் பெயரில் தான் எழுதி இருக்கும் தன் வரலாற்று நூலிலும் எந்த இடத்திலும் இப்படிப் பதிவு செய்யவில்லை. இருப்பினும் இது உண்மைதானா என்று அறிந்து கொள்ளும் ஆர்வத்தில், லெனின் வாழ்க்கை வரலாற்றைப் பல நூல்களைப் படித்துத் தொகுத்து எழுதியிருக்கும் பேராசிரி யர் அருணன் அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அப்படி ஒரு செய்தி எந்த இடத்தி லும் இல்லை என்று அவர் கூறினார்! பிறகு பேராசிரியர் இராம சீனிவாசன் அவர்களையே தொலைபேசியில் தொடர்பு கொண்டு எங்கே இதற்கான சான்று இருக்கி றது என்று கேட்டேன்.

பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்
திராவிட இயக்க தமிழர் பேரவை



இந்த இரண்டு பயணங்களில், ஒருமுறை கூட அவர் மாதக்கணக்கில் லண்டனில் தங்கவில்லை. தலைமறைவாகவும் அப்போது இல்லை. தன் வாழ்நாளில் மூன்றாவது முறை யாக லெனின் 1907 ஆம் ஆண்டு மே 13ஆம் தேதி லண்டனுக்குச் செல்கிறார்.

ஜூன் ஒன்று வரையில் அங்கு தங்கி இருக்கிறார். அவர் அப்போது சென்றதற்கான நோக்கம் அங்கு நடைபெற்ற ஐந்தாவது கட்சி மாநாட்டில் (5th Party Congress of RSDLP) கலந்து கொள்வ தற்காகவே! அதுவும் அவர் தனியாகச் செல்லவில்லை. பல நாடுகளிலுமிருந்து வந்திருந்த 366 தோழர்களில் ஒருவராகவே அவரும் அங்கு சென்று இருந்தார். இங்கிலாந்து அரசின் அனுமதியோடு தான் அம்மாநாடு அப்போது நடைபெற்றது என்பதால், அவர் தலைமறைவாக இருக்க வேண்டிய தேவையே அன்று எழவில்லை!

நான்காவது முறையாக லெனின் லண்ட னுக்குச் சென்றது 1908 ஆம் ஆண்டு. மே 16ஆம் நாள் அங்கு சென்றவர், ஜூன் 10ஆம் தேதி வரை அங்கே தங்கியிருந்தார்! இந்த முறை அவர் எங்கே தங்கி இருந்தார் என்பதை லெனின் குறிப்பிட்டு இருக்கிறார். 21, Tavistock place near regent square என்னும் இடத்தில் வாட கைக்கு ஒரு அறை எடுத்துத் தங்கி இருந்த தாகவும், மிகப் பெரும்பான்மையான நேரத்தைப் பிரிட்டிஷ் நூலகத்தில் செலவிட்டதாக வும், அந்த நோக்கத்திற்காகவேதான் அங்கு சென்றதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

அவர்களது கட்சியின் மஸ்தூர் யூனியன் தலைவர்களில் ஒருவரான தெங்கிடி எழுதியுள்ள “கம்யூனிச உரை கல்லில் கம்யூனிசம்” என்னும் சிறு நூலில் இருப்பதாகக் கூறினார். அது எப்படி முதல் ஆதாரம் ஆகும் என்று கேட்டேன். அதற்கு அவரிடம் இருந்து விடை இல்லை. தந்தை பெரியார் அவர்களைப் பற்றி நீங்கள் சொல்லியுள்ள கருத்தும் பிழையான தாக இருக்கிறதே, அதற்காவது சான்று இருக்கிறதா என்று கேட்டேன். அதனைத் தான் நெல்லை கண்ணன் அவர்கள் மேடை யில் பேசும்போது கேட்டதாகக் கூறினார். சரி, இதற்கெல்லாம் விடை சொல்ல நீங்கள் ஏன் இவ்வளவு சிரமப்பட வேண்டும் என்று நண்பர்கள் சிலர் கேட்கக்கூடும். எந்த விடையும் சொல்லாமல் இருந்தால், அடுத்த ஆண்டு பாடப் புத்தகத்திலேயே இதனைச்சேர்த்து விடுவார்கள் என்கிற அச்சம்தான் காரணம்!

**நன்றி: தீக்கதிர்**
**8.6.2023**

### ஒன்றிய அரசின் நிலக்கரி சுரங்க திட்டத்திலிருந்து டெல்டாவை மீட்ட

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு திருவாரூர் மாவட்டத்தில் பிரமாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கலைவாணன் அறிக்கை!

திருவாரூர், ஜூன் 9-

ஒன்றிய அரசின் நிலக்கரி சுரங்கதிட்டத்திலிருந்து டெல்டாவை மீட்டு தமிழக விவசாயத்தை காத்த தமிழ்நாடு முதல்வர் “டெல்டாக்காரர்” மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டம் வருகைதருவதையொட்டி மாவட்ட மக்களின் சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்படவுள்ளது என அனைவருக்கும் அழைப்பு விடுத்து மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை வெளியிட்டுள்ளார்.



பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது ,

“இந்திய துணைக்கண்டத்தில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக உருவாக்கி அனைத்துத் தரப்பினரும் பாராட்டும் வகையில் ஆட்சிபுரியும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா முதல்வர் தளபதி அவர்கள் டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளை பாரவையிட வருகை தர உள்ளார்கள். ஒன்றிய பி.ஜே.பி. அரசு பல்வேறு வடிவங்களில்தமிழக விவசாயத்தை அழிக்க முற்படும்போதெல்லாம், விவசாயிகளின் பாதுகாப்பு அரணாக இருந்து தமிழக விவசாயத்தை மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறுபதிப்பாக இருந்து காத்துவருகிறார்.

அன்று வேளாண் சட்டதிருத்த மசோதாவை கொண்டுவந்த ஒன்றிய அரசினை எதிர்க்கட்சியாக இருந்த போது எதிர்த்து அதனை வாபஸ் பெறச்செய்த நம் முதல்வர் அவர்கள், இன்று ஒன்றிய அரசு தமிழக டெல்டா மாவட்டங்களில் நிலக்கரி சுரங்கங்களை அமைத்து வேளாண்மையை அழிக்க முடிவெடுத்தபோது முதலமைச்சராக இருந்து ஒரே தீர்மானத்தில் ஒன்றிய அரசின் அந்த நிலக்கரி சுரங்க முடிவை வாபஸ்பெறச்செய்த “டெல்டாக்காரர்”ஆக ஒப்பற்ற தலைவர்தளபதி அவர்கள் விளங்கு கிறார்.

அப்படிப்பட்ட அந்த உன்னத தலைவர் ஆட்சிப்போற்றதும் தூர்வாரும் பணிகளை அறிவித்ததோடு, தொடர்ந்து அதனை தனது நேரடி பார்வையில் செயல்படுத்தி , தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகஅதனை பார்வையிட வருகைதந்து தமிழக விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிவருகிறார். எனவே “விவசாயத்தின் விடிவெள்ளி” தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் வருகைதருவதையொட்டி ,மாவட்ட எல்லையில் நமது மாவட்டக் கழகத்தின் சார்பில் அளிக்கப்படவிருக்கும் மாபெரும் வரவேற்பு நிகழ்விற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகளும், கழக தோழர்களும், பொதுமக்களும் பெருந்திரளாக வருகைதந்து சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வண்டலூரில் ஒன்றியச் செயலாளர் எஸ்.ஆரமுதன் ஏற்பாட்டில் 500 பொதுமக்களுக்கு அறுசுவை உணவு, புத்தாடைகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகளை கவுரவித்து அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியக்குழு தலைவர் உதயா கருணாகரன் உள்ளிட்டோர் உள்ளனர்.